**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-070220225236

Volume: 7

Issue: 2

Month: October

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 01.07.2022

Accepted: 20.08.2022

Published: 01.10.2022

Citation:
Dhusyanthan, M. "Different Rhythmic Varna in Kalyani Raga: A Research." *Shanlax International Journal of Tamil Research*, vol. 7, no. 2, 2022, pp. 57–63.

DOI:
https://doi.org/10.34293/tamil.v7i2.5236

*Corresponding Author:
kmt.music@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Different Rhythmic Compositions in Kalyani Raga - A Study

**M. Dhusyanthan**
*Lecturer, Department of Music*
*University of Jaffna, Srilanka*
*https://orcid.org/0000-0002-1548-6678*

**Abstract**
Various types of music are found in the world. The foundation for all these types of music is the svaras (musical notes). In the Carnatic music system, there are 7 svaras, 12 svara positions, and 16 svara names. Any music that is adorned with svaras and/or varnas and provides pleasure to the ears is considered sacred music. In Carnatic music, 'thanavarna' varnas are placed after geetams and before kritis. Varnas are generally of two types: thanavarna and padavarna. Varnas contain minimal sahitya (lyrics). They are seen as compositions that reduce literary content and provide more musical intricacies. Kalyani raga is the 65th melakarta raga. It is the fifth raga in the Rudra chakra (Rudra-ma). According to the Katapayadi system, it was named Mecha Kalyani. Different lakshanakaras (music theorists) have given this melakarta names like Shanta Kalyani and Mati Kalyani. In Dikshitar's teaching tradition, this raga is called Shanta Kalyani in the Raganga Ragamela system. The varnas studied include: 'Vanajākshi Ninnekori' composed by Pallavi Gopala Iyer in Kalyani raga and Adi tala; 'Neeve Gatiyani' composed by Syama Sastri in Tisra Matya tala; and 'Kamapatha' composed by Koorai Nadu Nadesa Pillai in Tisra Triputa tala. In the octave arrangement of phrases, middle octave phrases are predominantly found in all three varnas. The charanam (verse section) of all three varnas is composed with middle octave phrases. The first chittasvara of all three varnas consists of long notes. The octave range is found between the lower octave dhaivata and upper octave madhyama. In these Kalyani raga varnas, graha svaras, nyasa svaras, vadi, samvadi, anuvadi accompanying svaras, kampita gamakas, ascending passages, descending passages, conventional phrases, sphurita gamakas, panchama varjya phrases, and shadja varjya phrases have been identified. The characteristics of Kalyani raga can be understood through these three varnas. Despite being composed by different composers in different talas, these varnas show similarity in their structure. This appears to be an excerpt from an academic study analyzing different rhythmic compositions (thanavarnams) in the Kalyani raga of Carnatic classical music.

**Key Words:** Karnatic Music, Varnam, Kalyaniragam, Svarathanam

**References**

1. Sambamoorthy, P. 1998. South Indian Music - Book IV
2. Hēmā Rāmanāthan. 2004. Rāgalakṣaṇa Saṅgraha.
3. Sundaram, BM. 2008. Tāna Varṇa Taraṅgiṇi, Vol. 3

# கல்யாணி இராகத்தில் அமைந்த வெவ்வேறு தாள தானவர்ணம் – ஓர் ஆய்வு

*மு. துஸ்யந்தன்*
விரிவுரையாளர், இசைத்துறை, யாழ்.பல்கலைக்கழகம், இலங்கை

**ஆய்வுச்சுருக்கம்**
*உலகில் பல இசைகள் காணப்படுகின்றன. இந்த இசை வகைகளுக்கெல்லாம் அடிப்படையாக விளங்குவது ஸ்வரங்கள் ஆகும். அந்த இசைமுறைகளில் கர்நாடக இசையை எடுத்துக் கொண்டால் ஸ்வரங்கள் 7, ஸ்வரஸ்தானங்கள்12, ஸ்வரப்பெயர்கள் 16 என வகைப்படுத்தப்பட்டுள்ளன. எந்த இசையானது ஸ்வரங்களினாலோ மற்றும் வர்ணங்களினாலோ அலங்கரிக்கப்பட்டுச் செவிக்கு இன்பத்தினைத் தருகின்றதோ அதுவே புனிதமான இசையாகும். கர்னாடக இசையில் கீதங்களை அடுத்தும் கிருதிகளுக்கு முன்பும் இடம் பெறுவது "தானவர்ணம்" வர்ணம் என்பது பொதுவாகத் தானவர்ணம் மற்றும் பதவர்ணம் எனும் இருவகைப்பட்டது. வர்ணத்தில் சாஹித்தியம் குறைவாகவே காணப்படும். சாகித்தியத்தினை குறைத்து இசை சம்பந்தமான நுணுக்கங்களை அதிகமாக வழங்கும் உருப்படி வகையாகக் காணப்படுகின்றது. கல்யாணி இராகம் 65வது மேளகர்த்தாராகம். ருத்ரசக்கரத்தில் ஐந்தாவதுராகம் (ருத்ர-மா) கடபயாதி ஸங்கைக்காக மேச கல்யாணி என்று பெயரிடப்பட்டது. சாந்த கல்யாணி மதி கல்யாணி என்னும் பெயர்களை வேறு லக்ஷணகாரர்கள் இந்த மேளத்திற்கு கொடுத்திருக்கிறார்கள். தீட்சிதர் பாட சாலையில் ராகாங்க ராகமேள பத்ததியில் இந்த ராகத்தை சாந்த கல்யாணி என்று பெயரிடப்பட்டுள்ளது. பல்லவிகோபாலஐய்யர் அவர்களால் இயற்றப்பட்டகல்யாணி இராகத்திலும் அடதாளத்திலும் அமைந்தவர்ணம் வனஜாக்சி நின்னேகோரி, சியாமா சாஸ்திரிகளால் இயற்றப்பட்டதிஸ்ர மட்டியதாளத்தில் அமைந்தநீவேகதியனி மற்றும் கூறை நாடு நடேசபிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட திஸ்ரதிரிபுடை தாளத்தில் அமைந்த காமபாதஎன்றவர்ணமும் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது. பிரயோகங்களின் ஸ்தாயிஅமைப்பில் 3 வர்ணங்களிலும்மத்தியஸ்தாயிபிரயோகங்களேஅதிகமாகக்காணப்படுகின்றது.மூன்றுவர்ணங்களின்சரணம் மத்தியஸ்தாயி பிரயோகங்களைக் கொண்டு அமைந்திருக்கின்றது. மூன்று வர்ணங்களினதும் முதலாவது சிட்டைஸ்வரமானது தீர்க்க ஸ்வரங்களால் காணப்படுகின்றது. ஸ்தாயி எல்லையானது மந்தரஸ் தாயிதைவதத் திற்கும் தாரஸ்தாயிமத்திமத்திற்கும் இடையில் காணப்படுகின்றது. இந்தகல்யாணி இராக வர்ணத்தில் கிரஹ ஸ்வரங்கள், நியாஸ ஸ்வரங்கள், வாதி, சம்வாதி, அனுவாதி இணைஸ்வரங்கள், கம்பிதகமகம், ஏற்றஜாரு, இறக்கஜாரு, தாட்டுப்பிரயோகங்கள், ஸ்புரிதகமகங்கள் மற்றும் பஞ்சமவர்ஜப்பிரயோகம், ஸட்ஜம் வர்ஜப் பிரயோகங்கள் போன்றனவும் இனம் காணப்பட்டுள்ளது. 3 வர்ணத்தினை வைத்து கல்யாணிராகத்தின் லக்ஷணத்தை கண்டிறிய முடிகின்றது. வெவ்வேறுதாளம் வெவ்வேறு வாக்கேய காரர்களால் இயற்றப்பட்டதான வர்ணங்கள் அமைப்பில் ஒற்றுமையேகாணப்படுகின்றது.*

***திறவுச்சொற்கள்:*** *வர்ணம், கல்யாணி, ஸ்வரஸ்தானங்கள், ஸ்வரஞானம்,கமகம்*

## முன்னுரை

கர்னாடக இசையில் கீதங்களை அடுத்தும் கிருதிகளுக்கு முன்பும் இடம் பெறுவது "தானவர்ணம்" வர்ணம் என்பது பொது வாகத் தானவர்ணம் மற்றும் பதவர்ணம் எனும் இருவகைப்பட்டது. பதவர்ணம் நடனத்துக்குரியது. இசை நிகழ்ச்சிகளில் முதலிடம் பெற்றது தானவர்ணம். "தானம்" பாடும் முறையை ஒத்ததாக ஸ்வரப் பிரயோகங்களும் சாஹித்தியமும் அதிக

அகாரங்களுடனிருப்பதால் இதற்கு இப்பெயர். சாரீரத்தை வளமாக்கி எவ்வித கமகத்தையும் எந்த வேகத்திலும் எளிதாக இசைக்கும் திறனை கொடுப்பவை தானவர்ணங்கள். வர்ணம் என்னும் உருப்படியானது பயிற்சிக்கும், அரங்க நிகழ்ச்சிகளுக்கும் (கச்சேரிகளுக்கும்) பொதுவாக இருக்கும் ஓர் உருப்படி வகையாகும்.

கர்நாடக இசையைப் பொறுத்த வரையில் இராகம், தானம், பல்லவி, கீர்த்தனை, நிரவல், கற்பனாஸ்வரம், ஆரம்பப்பயிற்சிகள், ஜண்டை வரிசைகள், ஸ்வரவரிசைகள், தாரஸ்தாயிஸ்தாயி வரிசைகள், தாட்டு வரிசைகள், ஜதீஸ்வரங்கள் மற்றும் எல்லா உருப்படிகளினையும் சுத்தமாகப் பாடுவதற்கு ஸ்வரப் பயிற்சியானது முக்கியமானதாகும். மற்றும் ஆரம்பப் பயிற்சிகள் என்பன ஸ்வரங்களினாலேயே அமைந்து காணப்படுகின்றது. இந்த ஸ்வரங்கள் குரலிசைக்கு மட்டுமல்லாமல் இசை வாத்தியங்களுக்கும் முக்கியமானவையாகக் காணப்படுகின்றன.

வர்ணம் பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம் ஆகிய மூன்று பகுதிகளும் சேர்ந்து பூர்வாங்கம் எனப்படும். சரணம், சரண ஸ்வரங்கள் ஆகிய இரண்டு பகுதிகளும் சேர்ந்து உத்தராங்கம் எனப்படும். தான வர்ணத்தில் பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய பகுதிகளில் சாஹித்தியம் காணப்படும். மற்றைய பகுதிகள் ஸ்வரங்களால் மட்டும் அமைந்திருக்கும். தானவர்ணம் ஆதி தாளத்தில் மட்டும் இல்லாமல் கண்ட ஜாதி திரிபுடை தாளம், சதுஸ்ர ஜாதி அடதாளம், கண்ட ஜாதி அடதாளம், மிஸ்ரஜாதி ஜம்பை தாளம் ஆகிய தாளங்களில் அமைந்திருக்கும்.

வர்ணத்தில் சாஹித்தியம் குறைவாகவே காணப்படும். சாகித்தியத்தினைக் குறைத்து இசை சம்பந்தமான நுணுக்கங்களை அதிகமாக வழங்கும் உருப்படி வகையாகக் காணப்படுகின்றது. கல்யாணி இராகம் 65வது மேளகர்த்தா ராகம். ருத்ர சக்கரத்தில் ஐந்தாவது ராகம் (ருத்ர-மா) கடபயாதி ஸங்கைக்காக மேச கல்யாணியென்று பெயரிடப்பட்டது. அநேக ஜன்ய ராகங்களையுடைய ஜனக ராகங்களில் இதுவொன்று பிரதி மத்யம ராகங்கில் மிக்கப் பிரசித்திபெற்ற ராகம். ஷட்ஜ: பஞ்சமங்களைத் தவிர இந்த ராகத்தில் வரும் ஸ்வரங்கள்: சதுச்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், பிரதி மத்யமம், சதுச்ருதி தைவதம், காகலி நிஷாதம் 65 என்னும் இலக்கத்தைத் தரும் சாந்த கல்யாணி மதி கல்யாணி என்னும் பெயர்களை வேறு லஷ்ணகாரர்கள் இந்த மேளத்திற்கு கொடுத்திருக்கிறார்கள். தீட்சிதர் பாட சாலையில் ராகாங்கராக மேள பத்ததியில் இந்த ராகத்தை சாந்த கல்யாணி என்று பெயரிடப்பட்டுள்ளது.

பல்லவி கோபாலஐய்யர் அவர்களால் இயற்றப்பட்ட கல்யாணி இராகத்திலும் அடதாளத்திலும் அமைந்த வர்ணம் வனஜாக்ஷி நின்னேகோரி, சியாமா சாஸ்திரிகளால் இயற்றப்பட்ட திஸ்ர மட்டிய தாளத்தில் அமைந்த நீவே கதியனி மற்றும் கூறைநாடு நடேசபிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட திஸ்ரதிரிபுடை தாளத்தில் அமைந்த காமபாத என்ற வர்ணமும் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளது

## ஆய்வின் நோக்கம்

இந்த ஆய்விற்காகக் கல்யாணி இராகத்தில் மூன்று வெவ்வேறு தாளங்களில் வெவ்வேறு வாக்கேயகாரர்களினால் இயற்றப்பட்ட தானவர்ணம் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. வெவ்வேறு தாளங்களில் அமைந்த வர்ணத்தில் எப்படியான நுட்பங்களைக் கையாண்டிருக்கின்றனர் எந்த வகையான ஒற்றுமைகள், வேற்றமைகள் மாற்றங்கள் கொண்டிருக்கின்றன என்பது பற்றியதும் இந்த வர்ணங்களினுாடாக கல்யாணி ராகத்தின் லக்சுணங்களையும் அறிவது இவ்ஆய்வின் நோக்கமாகக் காணப்படுகின்றது.

## ஆய்வின் பரப்பு

இந்த ஆய்வில் கல்யாணி இராகத்தில் மூன்று வெவ்வேறு தாளத்திலும் அமைந்த வர்ணங்கள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றது. அடதாளம், திஸ்ரதிரிபுடை தாளம், திஸ்ர மட்டிய தாளம் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. இந்த வர்ணங்கள் பி.எம்.சுந்தரம் அவர்களினால் தொகுக்கப்பட்ட வர்ண தரங்கிணி என்ற நூலில் இருந்தும் மற்றும் வா.சு.கோமதி சங்கரஐயர் அவர்களினால் தொகுக்கப்பட்ட தான வர்ணக்கடல் என்ற நூலில் இருந்தும் பெறப்பட்டவையாகும்.

## ஆய்வுப் பகுதி

இராகம் - கல்யாணி


தாளம் - கண்டஅட

இயற்றியவர் - பல்லவி கோபாலஐய்யர்

சாஹித்தியம் - வனஜாக்ஷி நின்னேகோரி

இந்த வர்ணத்தின் அங்கங்களாக பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம், சரணம் மற்றும் சரண ஸ்வரங்கள் காணப்படுகின்றன. இந்த வர்ணத்தில் மொத்தமாக 13 ஆவர்த்தனங்கள் காணப்படுகின்றன. பல்லவி-2, அனுபல்லவி-02, முக்தாயிஸ்வரம்-2 சரணம்-1, மற்றும் 5 சரணஸ்வரத்தில் முதல் 4 சரண ஸ்வரங்களும் 1 ஆவர்த்தனத்தையும் இறுதி சரண ஸ்வரம் 2 ஆவர்த்தனத்தையும் கொண்டமைந்திருக்கின்றது. இந்த வர்ணம் தெலுங்கு சாஹித்தியத்தைக் கொண்டு அமைந்து காணப்படுகின்றது.

வர்ணத்தின் முழுவதுமான ஸ்வர நிலையானது மந்தரஸ்தாயி தைவதத்தில் இருந்து தாரஸ்தாயி மத்திமம் வரை காணப்படுகின்றது. முதலாவது சரணஸ்வரத்தினை தவிர மற்றைய அங்கங்கள் அனைத்தும் மத்தியஸ்தாயியில் ஆரம்பிக்கின்றது குறிப்பிடத்தக்கது.




மேற்படி வரைபில் காட்டப்பட்டிருப்பது பிரயோகங்கள் ரீதியிலான ஸ்தாயி அமைப்பாகும். இந்த வரைபின்படி வர்ணத்தின் முழுப்பகுதியிலும் மத்தியஸ்தாயி பிரயோகங்களே அதிகமாகக் காணப்படுகின்றது. சரணம் மத்தியஸ்தாயி பிரயோகத்தை மட்டும் கொண்டு அமைந்திருக்கின்றது. முதலாவது சிட்டைஸ்வரமானது முழுவதும்.

| அங்கங்கள் | கிரகஸ்வரம் | நியாஸ ஸ்வரம் |
|---|---|---|
| பல்லவி | பஞ்சமம் | காந்தாரம் |
| அனுபல்லவி | மத்திமம் | காந்தாரம் |
| முக்தாயிஸ்வரம் | மத்திமம் | காந்தாரம் |
| சரணம் | ஸட்ஜம் | நிஷாதம் |
| சரணஸ்வரம் - 01 | ரிஷபம் | நிஷாதம் |
| சரணஸ்வரம் - 02 | தைவதம் | நிஷாதம் |
| சரணஸ்வரம் - 03 | மத்திமம் | நிஷாதம் |
| சரணஸ்வரம் - 04 | தைவதம் | நிஷாதம் |
| சரணஸ்வரம் - 05 | பஞ்சமம் | நிஷாதம் |




## பஞ்சம வர்ஜப்பிரயோகங்கள்

இந்த வர்ணத்தில் தமகரிஸநி - தமகரிஸநிதகரி - நிதமகரி - நிதமகரிஸநிதகரி - ஸாரிநிதததமக - பமதமகரீ - நிதமக - மாதாமாகாரீ - தநிதமக - தமகரிஸ - கதமகரி - நிரிநிதம - தமகரி - தமகரீ - தாநிதமக போன்ற பஞ்சம வர்ஜப் பிரயோகங்கள் காணப்படுகின்றன.

## ஸ்புரித கமகம்


ககததநிநிஸ - மபததநிநி, ஸ்ஸ்நிநிதப - ததநிநிஸ் போன்ற ஸ்புரித கமகப் பிரயோகங்கள் இந்த வர்ணத்தில் காணப்படுகின்றது.

இந்த வர்ணத்தினைப் பாடும்போது பிரத்தியாகத கமகங்கள், கம்பித கமகப் பிரயோகங்கள் காணப்படுகின்றன. காந்தாரம் மற்றும் தைவதம் கம்பித கமகமாக

ஒலிக்கின்றது. மற்றும் வாதி, சம்வாதி ஸ்வரப் பொருத்தம் உள்ள ஸ்வரப்பிரயோகங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. வர்ணத்தில் தாட்டுப் பிரயோகங்கள் ஒவ்வொரு பகுதியிலும் வருவதைக் காணலாம். அத்தோடு இந்த வர்ணத்தில் இறக்கஜாரு கமகப் பிரயோகங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த வர்ணமானது 14 அட்சரங்களைக் கொண்ட தாளமான அடதாளத்தில் அமைந்திருக்கின்றது. சமத்தில் இருந்து 14 மாத்திரைகள் தள்ளி ஆரம்பிக்கின்றது.

இராகம் - கல்யாணி
தாளம் - திஸ்ர திரிபுடை
இயற்றியவர் - கூறைநாடு நடேசப்பிள்ளை
சாஹித்தியம் - காமபாத

இந்த வர்ணத்தின் அங்கங்களாக பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம், சரணம் மற்றும் சரண ஸ்வரங்கள் காணப்படுகின்றன. இந்த வர்ணத்தில் மொத்தமாக 12 ஆவர்த்தனங்கள் காணப்படுகின்றன. பல்லவி - 2, அனுபல்லவி - 02, முக்தாயிஸ்வரம் - 2 சரணம்-1, மற்றும் முதல் 3 சரணஸ்வரங்களும் 3 ஆவர்த்தனங்களையம் நான்காவது சரண ஸ்வரம் 2 ஆவர்த்தனங்களையும் கொண்டமைந்திருக்கின்றது. இந்த வர்ணம் தெலுங்கு சாஹித்தியத்தைக் கொண்டு அமைந்து காணப்படுகின்றது.




மேற்படி வரைபில் காட்டப்பட்டிருப்பது பிரயோகங்கள் ரீதியிலான ஸ்தாயி அமைப்பாகும். இந்த வரைபின் படி வர்ணத்தின் முழுப் பகுதியிலும் மத்தியஸ்தாயி பிரயோகங்களே அதிகமாகக் காணப்படுகின்றது. சரணம் மத்தியஸ்தாயி பிரயோகத்தை மட்டும் கொண்டு அமைந்திருக்கின்றது.

வர்ணத்தின் முழுவதுமான ஸ்வர நிலையானது மந்தரஸ்தாயி நிதத்தில் இருந்து தாரஸ்தாயி மத்திமம் வரை காணப்படுகின்றது. நான்காவது சரணஸ்வரத்தினைத்தவிர மற்றய அங்கங்கள் அனைத்தும் மத்தியஸ்தாயியில் ஆரம்பிக்கின்றது குறிப்பிடத்தக்கது.

| அங்கங்கள் | கிரகஸ்வரம் | நியாஸ ஸ்வரம் |
|---|---|---|
| பல்லவி | காந்தாரம் | ரிஷபம் |
| அனுபல்லவி | தைவதம் | ரிஷபம் |
| முக்தாயிஸ்வரம் | காந்தாரம் | ரிஷபம் |
| சரணம் | தைவதம் | பஞ்சமம் |
| சரணஸ்வரம் - 01 | காந்தாரம் | பஞ்சமம் |
| சரணஸ்வரம் - 02 | காந்தாரம் | பஞ்சமம் |
| சரணஸ்வரம் - 03 | மத்திமம் | பஞ்சமம் |
| சரணஸ்வரம் - 04 | ஸட்ஜம் | பஞ்சமம் |




**பஞ்சம வர்ஜப்பிரயோகங்கள்**


இந்த வர்ணத்தில் தமகரீ - கமதநிரி - நிதமகரி - ரிநீதமா போன்ற பஞ்சம வர்ஜப் பிரயோகங்கள் காணப்படுகின்றன.

மேற்படி வர்ணத்தில் பிரயோகங்களில் தைவதம், ரிசுபம் கம்பித கமகமாக ஒலிக்கின்றது. மற்றும் பிரயோகங்களில் நி-ப, ம-ரி போன்ற அனுவாதிஸ்வரப் பொருத்தம் உள்ள ஸ்வரப் பிரயோகங்களும் த-க் போன்ற வாதிஸ்வரப் பொருத்தம் உள்ள ஸ்வரப் பிரயோகங்களும் காணப்படுகின்றன.

இந்த வர்ணத்தினைப் பாடும்போது பிரத்தியாகத கமகங்கள், கம்பித கமகப்பிரயோகங்கள் காணப்படுகின்றன. மற்றும் வாதி, சம்வாதி ஸ்வரப் பொருத்தம் உள்ள ஸ்வரப்பிரயோகங்கள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. வர்ணத்தில் தாட்டுப்பிரயோகங்கள் ஒவ்வொரு பகுதியிலும் வருவதைக் காணலாம். அத்தோடு இந்த வர்ணத்தில் இறக்கஜாரு கமகப்பிரயோகங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த வர்ணமானது 7 அட்சரங்களைக் கொண்ட தாளமான திஸ்ரஜாதி திரிபுடை தாளத்தில் அமைந்திருக்கின்றது. சம எடுப்பில் இருந்து ஆரம்பிக்கின்றது.


இராகம் - கல்யாணி
தாளம் - திஸ்ரஜாதி மட்யம்
இயற்றியவர் - சியாமாசாஸ்திரிகள்
சாகித்தியம் - நீவேகதி

இந்த வர்ணத்தின் அங்கங்களாக பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம், சரணம் மற்றும் சரண ஸ்வரங்கள் காணப்படுகின்றன இதனைவிட அனுபந்தம் என்ற பகுதியும் காணப்படுகின்றது இந்தப்பகுதில் சாஹித்யம் காணப்படுகின்றது. இந்த வர்ணத்தில் மொத்தமாக 15 ஆவர்த்தனங்கள் காணப்படுகின்றன. இதனை விட அனுபந்தத்தில் 4 ஆவர்த்தனங்கள் காணப்படுகின்றது. பல்லவி - 2, அனுபல்லவி - 02, முக்தாயிஸ்வரம் - 2 சரணம் - 1, மற்றும் முதல் 3 சரணஸ்வரங்களும் 3 ஆவர்த்தனங்களையம் நான்காவது சரண ஸ்வரம் 2 ஆவர்த்தனங்களையும் கொண்டமைந்திருக்கின்றது. இந்த வர்ணம் தெலுங்கு சாஹித்தியத்தைக் கொண்டு அமைந்து காணப்படுகின்றது.




மேற்படி வரைபில் காட்டப்பட்டிருப்பது பிரயோகங்கள் ரீதியிலான ஸ்தாயி அமைப்பாகும். இந்த வரைபின்படி வர்ணத்தின் முழுப் பகுதியிலும் மத்தியஸ்தாயி பிரயோகங்களே அதிகமாகக் காணப்படுகின்றது. சரணம் மத்தியஸ்தாயி பிரயோகத்தை மட்டும் கொண்டு அமைந்திருக்கின்றது. முதலாவது சிட்டைஸ்வரமானது முழுவதும் தீர்க்கஸ்வரங்களைக் கொண்டமைந்திருக்கின்றது. வர்ணத்தின் முழுவதுமான ஸ்வர நிலையானது மந்தரஸ்தாயி தைவதத்தில் இருந்து தாரஸ்தாயி மத்திமம் வரை காணப்படுகின்றது. முதலாவது சரணஸ்வரத்தினைத்தவிர மற்றய அங்கங்கள் அனைத்தும் மத்தியஸ்தாயியில் ஆரம்பிக்கின்றது குறிப்பிடத்தக்கது.

| அங்கங்கள் | கிரகஸ்வரம் | நியாஸ ஸ்வரம் |
|---|---|---|
| பல்லவி | நிஷாதம் | தைவதம் |
| அனுபல்லவி | ஸட்ஜம் | தைவதம் |
| முக்தாயிஸ்வரம் | நிஷாதம் | தைவதம் |
| சரணம் | ஸட்ஜம் | நிஷாதம் |
| சரணஸ்வரம் - 01 | தைவதம் | நிஷாதம் |
| சரணஸ்வரம் - 02 | தைவதம் | நிஷாதம் |
| சரணஸ்வரம் - 03 | ஸட்ஜம் | நிஷாதம் |
| சரணஸ்வரம் - 04 | ஸட்ஜம் | நிஷாதம் |
| அனுபந்தம் | ஸட்ஜம் | தைவதம் |




## பஞ்சம வர்ஜப்பிரயோகங்கள்

இந்த வர்ணத்தில் மதமகரிஸ - தநிதமகரி - தாமாகாரீ - போன்ற பஞ்சம வர்ஜப் பிரயோகங்கள் காணப்படுகின்றன.

ஸ்க் - அனுவாதிப் பொருத்தம் உள்ள ஸ்வரங்களைக் கொண்ட பிரயோகங்களும் ரித சம்வாதி ஸ்வரங்களைக்கொண்ட

பிரயோகங்களும்தக்-நிகவாதிப்பொருத்தம் உள்ள ஸ்வரங்கள் பிரயோகங்களில் காணப்படுகின்றது. மேலும் இந்த வர்ணத்தினை பாடும்போது பிரத்தியாகத கமகங்கள், கம்பித கமகப்பிரயோகங்கள் காணப்படுகின்றன. வர்ணத்தில் தாட்டுப் பிரயோகங்கள் ஒவ்வொரு பகுதியிலும் வருவதைக் காணலாம். அத்தோடு இந்த வர்ணத்தில் இறக்கஜாரு கமகப் பிரயோகங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இந்த வர்ணமானது 8 அட்சரங்களைக் கொண்ட தாளமான திஸ்ரஜாதி திரிபுடை தாளத்தில் அமைந்திருக்கின்றது. சம எடுப்பில் இருந்து ஆரம்பிக்கின்றது. இந்த வர்ணத்தில் உத்தராங்கப் பகுதியில் சரணஸ்வரங்களுக்குப் பின்னர் அனுபந்தம் என்ற பகுதி காணப்படுகின்றது. இந்தப் பகுதி ஸ்வர சாகித்யமாகக் காணப்படுகின்றது.

## முடிவுரை

பல்லவி கோபால ஐய்யர் அவர்களால் இயற்றப்பட்ட கல்யாணி இராகத்திலும் அடதாளத்திலும் அமைந்த வர்ணம் வனஜாக்ஷி நின்னேகோரி, சியாமா சாஸ்திரிகளால் இயற்றப்பட்ட திஸ்ர மட்டிய தாளத்தில் அமைந்த நீவேகதியனி மற்றும் கூறைநாடு நடேசபிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட திஸ்ரதிரிபுடை தாளத்தில் அமைந்த காமபாத என்ற வர்ணமும் ஆய்வு செய்து எடுக்கப்பட்ட முடிவின்படி 3 வர்ணமும் வெவ்வேறு தாளங்களைக் கொண்டிருந்தாலும் புர்வாங்கம் உத்தராங்கம் என்று 2 பிரிவுகளைக் கொண்டுள்ளது. பல்லவி, அனுபல்லவி, முக்தாயிஸ்வரம் மற்றும் சரணம், சரணஸ்வரங்களைக் கொண்டுள்ளது.

பிரயோகங்களின் ஸ்தாயி அமைப்பில் 3 வர்ணங்களிலும் மத்தியஸ்தாயி பிரயோகங்களேஅதிகமாகக்காணப்படுகின்றது. மூன்று வர்ணங்களின் சரணம் மத்தியஸ்தாயி பிரயோகங்களைக் கொண்டு அமைந்திருக்கின்றது. மூன்று வர்ணங்களினதும் முதலாவது சிட்டைஸ்வரமானது தீர்க்கஸ்வரங்களால் காணப்படுகின்றது. ஸ்தாயி எல்லையானது மந்தரஸ்தாயி தைவதத்திற்கும் தாரஸ்தாயி மத்திமத்திற்கும் இடையில் காணப்படுகின்றது.

இந்த கல்யாணி இராக வர்ணத்தில் கிரஹ ஸ்வரங்கள், நியாஸ ஸ்வரங்கள், வாதி, சம்வாதி, அனுவாதி இணைஸ்வரங்கள், கம்பித கமகம், ஏற்றஜாரு, இறக்கஜாரு, தாட்டுப்பிரயோகங்கள், ஸ்புரித கமகங்கள் மற்றும் பஞ்சம வர்ஜப்பிரயோகம், ஷட்ஜம் வர்ஜப் பிரயோகங்கள் போன்றனவும் இனம் காணப்பட்டுள்ளது. 3 வர்ணத்தினை வைத்துக் கல்யாணி ராகத்தின் லக்ஷணத்தை கண்டிறிய முடிகின்றது.

வெவ்வேறு தாளம் வெவ்வேறு வாக்கேயகாரர்களால் இயற்றப்பட்ட தானவர்ணங்கள் அமைப்பில் ஒற்றுமையே காணப்படுகின்றது.

## துணை நூற்பட்டியல்

1. சுந்தரம்,பி.எம். 1995. வர்ணதரங்கினி, சென்னை, இந்தியா
2. பஞ்சாபகேசஅய்யர், ஏ. எஸ். 1953, கானாம்ருத போதினி, Zion printers, சென்னை,
3. ராமானுஜ அய்யங்கார். 1986. தென் இந்திய இசை வரலாறு இராஜ லக்ஸ்மி பதிப்பகம், சென்னை, இந்தியா.